BRAMPTON Flower City
brampton.ca

Service and Information Update

# ப்ராம்ப்ட்டன் மாமன்றத்தின் தீர்மானம் மற்றும் அறிவிப்பு பலகை வைப்பதற்கான உபவிதி பற்றிய புது செய்தி

ப்ராம்ப்ட்டன், ON (January 28, 2020) – ஜனவரி 22 ஆம் தேதிய ப்ராம்ப்ட்டன் மாநகர மாமன்றக் கூட்டத்தில் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது; அதன்படி ஒரு சமூக ஊடக கணக்கு அல்லது ஒரு தேர்தல் வேட்பாளருடைய அடையாளம் அல்லது அது/அவர் பற்றிய குறிப்பினைக் கொண்டிருக்கின்ற எந்த ஒரு அறிவிப்பு பலகையும் வைப்பதற்கு கட்டுப்பாடு விதிக்கப்படுகிறது; இந்த அறிவிப்பு பலகை வைப்பதற்கான மாநகர உபவிதிகள் மறுபரிசீலனை செய்யப்படும் வரை இந்தக் கட்டுப்பாடு இருக்கும்.

தீர்மானத்தில் கூறப்படுவதாவது:

அறிவிப்பு பலகைக்கான உப சட்டம் 399-2002 இன் மீது மேற்கொள்ளப்படுகின்ற மறுபரிசீலனை முடிந்து, அதற்கான திருத்தமானது மாமன்றத்தினால் பரிசீலித்து முடிக்கப்படும் வரை, இந்த அறிவிப்புப் பலகைகள் வைக்க அனுமதி கிடையாது; இந்த நடவடிக்கையானது ப்ராம்ப்ட்டன் நகரில் இருக்கும் பார்வையில் படுகின்ற அறிவிப்புப் பலகைகளானவை பேச்சு சுதந்திரத்தின் நலன் கருதியும், தேர்தலில் தேர்ந்தெடுக்கப்பட்ட அதிகாரி அல்லது வேட்பாளரின் (மாமன்ற வார்டு, பிரதேசம் மற்றும் கூட்டு அரசின் அலுவலகம் அலுவலர்களுடைய புகைப்படம், வலைத்தளம் அல்லது சமூக ஊடக லின்க் ஆகியவற்றுடன் இருப்பவை) உறுப்பினர் நலன் கருதியும் இப்படி செய்யப்படுகிறது.

“மெதுவாக செல்லவும்” என்னும் அறிவிப்பு பலகைகள் வைப்பதை இந்த தீர்மானம் தொடர்ந்து அனுமதிக்கிறது; அதே சமயத்தில் இதற்கான உப விதியானது ஜனவரி 9 ஆம் தேதியிட்ட மாநகர மன்றத்தின் கூற்றுப்படி மாநகர மன்றத்தினால் முழுமையான ஒரு மறுபரிசீலனைக்கு உட்படுத்தப்படுகிறது. எனினும், ஜனவரி 22, 2020 தேதிக்கு பின்னர் நட்டு வைக்கப்பட்ட “மெதுவாக செல்லவும்” எனும் எந்த ஒரு அறிவிப்புப் பலகையும் மாமன்றத்தின் தீர்மானத்தின்படி ஒத்திசைவு கொண்டிருக்க வேண்டும்; இதில் குறிப்பிடப்படும் எந்த வலைத்தளமும், தேர்ந்தெடுக்கப்பட்ட எந்த ஒரு வேட்பாளரின் பெயரை சுட்டிக்காட்டலாகாது. இந்த தீர்மானமானது “தயவு செய்து மெதுவாக செல்லவும்” என்னும் அறிவிப்பு பலகைகள் வைப்பதை இதற்கான உப விதியின் பிரிவு 8(4) இன் படி தொடர்ந்து அனுமதிக்கிறது. இந்த விதிவிலக்கு 2002 ஆம் ஆண்டில் ஒப்புதல் அளிக்கப்பட்டது. ஜனவரி 9 ஆம் தேதியிட்ட மாநகர மன்றத்தின் கூற்றுப்படி அறிவிப்புப் பலகைக்கான உப விதியானது மாநகர மன்றத்தினால் தொடர்ந்து முழுமையான ஒரு மறுபரிசீலனைக்கு உட்படுத்தப்படுகிறது.

இப்படியான அறிவிப்பு பலகைகள், அவற்றுக்கான உப விதிகளின் தேவைப்பாடுகளுக்கு தொடர்ந்து இணக்கமாக இருக்க வேண்டும்; இப்படி நட்டு வைக்க்கப்படுகின்ற அறிவிப்பு பலகைகள் (சாலை ஓரங்களில் சாலை மீது இருக்காமல்) தனியார் சொத்துக்களில்தான் இருக்கவேண்டும்; அதன் அளவு 4.3 சதுர அடி பரப்பு கொண்டதாக இருக்க வேண்டும்; ஒரு சாலை இரண்டாகப் பிரியும் முக்கோணச் சந்திப்பில் சாலைகளை மறைக்கும்படி இருக்கலாகாது. இதன் வகையில் குடியிருப்புவாசிகள் தங்கள் சொத்துக்களின் எல்லை வரம்புகளை சரிபார்த்துக்கொள்ள வேண்டும். அறிவிப்பு பலகைகள் பற்றிய இதர ஒழுங்குமுறைகள் மற்றும் தடைகள் ஆகியவற்றை உப விதியின் பிரிவு 5 இல் பார்த்துக்கொள்ளலாம்.

மாநகரின் சொத்துக்கள் மீது, அதாவது மாநகருக்கு சொந்தமான நகர்ப்புற உட்காரும் பெஞ்சுகள் போன்றவை, பேருந்து நிறுத்த காத்திருப்பு நிழல் குடைகள், ஆகியவற்றின் மீது விளம்பரம் செய்வது, "மாநகரின் சொத்துக்கள் மீது விளம்பரம் செய்வது தொடர்பான", மாமன்றம் ஒப்புதல் அளித்த கொள்கையினால் ஆளுமை செய்யப்படுகிறது; இது உபவிதிக்கு உட்படுவதில்லை. அறிவிப்பு பலகை பற்றிய உப விதி மீதான முழுமையான மறுபரிசீலனையின் பேரிலான முடிவுகள் இந்த வருடத்தின் பிற்பகுதியில் கிடைக்கும் என மாநகர மன்றம் எதிர்நோக்குகிறது.

**ஊடக தொடர்பு**

மோனிக்கா துக்கல்
ஒருங்கிணைப்பாளர், ஊடகம் & சமுதாய ஈடுபாடு
யுக்திரீதியான தகவல் தொடர்பு
ப்ராம்ப்டன் நகரம்
905-874-3426 |
Monika.Duggal@brampton.ca